

தெல்லிப்பழை கொல்லங்கலட்டி மல்லாகம் திரு. செல்வேந்திரா தம்பதிகளின்

அன்பு மைந்தன் **அமரர் பிரதீப்குமார்**

அவர்களின்

திருவடிப்பேறு குறித்த

# நினைவு தீபம்

**08.06.2006**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெல்லிப்பழை – கொல்லங்கலட்டி

மல்லாகம்

**திரு. செல்வேந்திரா தம்பதிகளின்**

அன்பு மைந்தன்

# அமரர் பிரதீப்குமார்

அவர்களின்

திருவடிப் பேறு குறித்த

# நினைவுத் தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

காசினி தனிலொளி விளக்காகி

கவலைகள் தீர்க்கும் நல் மருந்தாகி

கவினுறு சேயென எம்கரத்தில்

தவழ்ந்தும் தரணியில் நலங்காண

மாசில் மலராய் முன்தோன்றி

மகிழ்ச்சிக் கடலில் நாம் நீந்த

மாண்புறு வழிகள் பல கண்டும்

மண்ணில் எழுச்சி மிகு கூட்டி

வீசும் தென்றல் என மணக்கும்

வித்தே எம்குல முத்தேயுன்

விண்ணக வாழ்வின் நினைவாகச்

செய்த இம்மலர் முத்தினையே

தேசுறும் உன்மலரடியினிலே

வைத்தும் வணங்கி உந்தனுக்கே


சமர்ப்பணம் செய்தோம் எம்முயிரே

ஏற்பீர் உமக்கிது சமர்ப்பணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மலர்வு
28.12.1977

உதிர்வு
10.04.2006

அமரர்

# செல்வேந்திரா பிரதீப்குமார்

அவர்கள்

- B. Sc (Computer Scince) -

## திதி வெண்பா

ஆண்டு நல் வியமதனில் ஆன நல் சித்திரையில்
பூண்ட நல் பூர்வ துவாதசியில் - நல்ல
நேசமிகு பிரதீப் குமாரிவரும் ஈசன்
பாசமிகு தாளடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பானீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்த தாரே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள் புரியாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வத் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டு ஓலமிட்டு
இன்னும் புகவரிதாய்
இந்திரத் தழைப்ப என்னுயிராண்ட
கோவிலுக்கு என்செய்ய வல்லமென்று
கரந்தும் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளி என்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருளிச் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடும் சேவடி போற்றி என்ன.

## திருப்புகழ்

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளே சிறக்க அருள்வாயே
கதிர் கா் வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ்ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெ னுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறாய் நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடையின் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பி னாவி லுணர்த்திக்
குண்டலியதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக் கரத்தினீரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்கமும்
எண்முக மாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்த முத்தி என்செவியில்
எல்லையில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வளி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே. [முற்றும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏக னநேக நிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பயன்யான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகளுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புளுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவு இறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொளும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றங் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிறாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிற்யேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற்பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி லுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

சிவபுராணம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
களி, பிணி இல்லாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாளாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமிலாத வாழ்வும்
துய்யனின் பாதத்தின் அன்புமுத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாளி அரிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாம் தரும் அன்பரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குலாள் அபிராமி கடைக்கண்களே

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை
அண்டமெல்லாம் பூத்தாளை
மாதுளம்பூ நிறத்தாளை
புவியடங்கக் காத்தாளை
ஐங்கனை பாசாங்குசமும்
கரும்பும் வில்லும் சேர்த்தாளை
முக்கண்ணியைத் தொழுவார்க்கு
ஒரு தீங்கில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரிகாப்பு

**விநாயகர் துதி**

முன்னின்று செய்யும் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்று நருன்செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றம் வராமற்கா.

வேண்டுதற்கறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைக் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக் காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சுலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷா சுரனைக் க றுபோட்டவளே
அசுரக்குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தெல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தெல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லே சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனை பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலம்மிதை வழிவழியாய்க் காட்டிடுவீா
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுசெழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
பிள்ளைகள் அற்றவருக்கு பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம் மிகு வல்லபையே
காப்பெடுமுக்க வந்தேனம்மா கனிவுடனே காருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
என்தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உனதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்கு போட்டுவிட்டால் கல்மனதும் இழகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுத்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்

நம்பி அணிவோர்க்க நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொளுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்பு கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச்
செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனன்றுடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமைச் செயல் எதுவும் தெரியாது செய்கையிலே
காப்பக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனதுடனே பரவி அணிவோர்க்கு
கீர்த்தி எல்லாந் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்திலோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனை காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவிட
ஞானம் கிளர்ந்துவர நல்லருளை செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவி பராசக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்து கௌரியம்மா காப்பருள்வாய்.

முற்றும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *அமரர் செல்வேந்திரா பிரதீப்குமார் அவர்களின்*

# வாழ்வியல் வண்ணக் கோலம்

சீர்பூத்த நன்னிலமாம் ஈழத்திருநாட்டின் வடதிசையில் அருளொளிபரப்பும் நகுலேஸ்வரமும் மாவைக் கந்தனாலயமும் இருகண்ணென விளங்க பக்தி மணம்பரப்பும் ஐங்கரனாலயத் தைத் தன்னுட் கொண்டு விளங்குவதே கொல்லங்கட்டி என்னும் திருவுடைச் சீருராகும்.

இங்கும் இல்லற நன்னெறி பேணி நல்லறம் காத்தோரே செல்வேந்திரா சுசீலாதேவிதம்பதியர் ஆவார். இவ்வாறு இவர்கள் அறநெறி பேணியும் அன்பு பாராட்டியும் வாழ்ந்த வாழ்வின் சின்னமாக 1977.12.28 அன்று அவதரித்தவரே அமரர் பிரதீப்குமார் ஆவார்.

இவ்வாறே இனிதே தாய்மடியில் தவழ்ந்தும் விளையாடியும் மகிழ்வுற்ற காலை "தனித்திங்கு நான்வாழ்தல் தகுமோ? தனிவழிக்கு ஓர் துணையைத் தருவாய்" என்று வேண்டினாற் போலும் தனக்கொரு தம்பியாக பிரசன்னா அவர்களையும் கண்டு மகிழ்ந்தார்.

மேலும் மெல்ல வளர்ந்து மேதினியில் உயரும்போது 'நல்லறிவு தலைப்பட்டு வாழ்தல் வேண்டும்' என்றவழி உரிய பருவம் கண்டும் உவகை பூச்சொரிய கல்வி என்னும் தேனைநாடி ஆரம்பக் கல்வியைத் தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியிலும் உயர்கல்வியை யாழ் இந்துக் கல்லூரியிலும் பெற்றார்.

பின்னும் கல்விக்கெல்லை ஏது? என்றவழி அதிஉயர் கல்வியை பெறும்பொருட்டு இந்தியா சென்று பங்களூர் பல்கலைக்கழகத்தில் Bsc கணணணித்துறையில் உயர் கல்வி கற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்திலேயே 1995.07.14 அன்று காலனவன் விமானத்தில் வந்து பொழிந்த குண்டுக்குத் தன் தாயே இரையாகக் கண்டும் துடித்தார்.

பின்னும்கல்வியில் ஓர் நிலை கண்டும் தொழில் நலம் கண்டும் இன்புறவேண்டும்என்ற சிந்தையினாலும்

'கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக'' என்ற வள்ளுவர் சொல்லமுதம் கண்டும் அவ்வழி நிற்க வேண்டி தன் முயற்சித் திறத்தினால் 1999 - 2000 காலப்பகுதியில் புனர்வாழ்வுத் திணைக்களத்தில் Welfare officer ஆகப் பணியாற்றினார்.

பின்னும் யா/கந்தரோடை ஸ்கந்தரோதையாக் கல்லூரியில் கணனி ஆசிரியராகவும் பணிபுரிந்தார். பின் போரூட் நிறுவனத்தில் லிகிதராக 2003 - 2004 காலப்பகுதியிலும் பின் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தில் கிளிநொச்சியில் சமூகப்பங்கு செயற்பாட்டு அலுவலராகவும் பணிபல புரிநதார்.

இவ்வளவில் உத்தியோகம் புருஷலட்சணம் என்ற வழி தொழில்நலம் கண்டபேறும் காலமும் கைகூட கொல்லங்கலட்டியைச் சேர்ந்தவரும் தற்போது கனடாவில் வாழ்பவருமான தில்லைநடராஜா தம்பதிகளின் செல்வப் புதல்வி நவநிதி அவர்களை 28.08.2004 அன்று பதிவுத் திருமணம் புரிந்தும்

''வகுத்தான் வகுத்த வழியலவ்லால் கோடி

தொகுத்தாலும் துய்த்தல் அரிது'' என்றவழி வாழ்க்கைப் படகு ஓடவரும் துடுப்பாகி நின்றவேளை 10.04.2006 அன்று கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தின் ஊடாக ''பொதுநலநோக்கே என்நோக்கு'' என்றவழி கடமை முடிந்து வீடு வரும் வேளை இனந்தெரியாதோரின் கிளைமோர்க் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி இந்நிலவாழ்வு நீக்கி இறையடி சேரலானார் அன்னாரின் ஆத்மா இறையடியில் சாந்திபெற பிரார்த்திப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதுரை

மனித வாழ்வும் விதியின் பிரகாரமே அசைந்து ஊரும். எமக்கு எது எப்போ எவ் வகையில் என்ன நேரும் என்பது கூட மனித அறிவினாலும் உணரமுடியாது. எதுவும் நிலையில்லாதவையே . எது தோற்றம் கொள்கின்றதோ அது அழிந்தேயாகும். மனிதப் பிறவியும் அத்தகையதே. பிறந்தவர் இறப்பது திண்ணம். இறப்பு அவனவன் ஆற்றும் தர்மவழியின் சார்பில் அமையும் தாம்பெற்ற செல்வம் எவ்வாறு ஈடேற்றப்படு கிறதென்பதைக் கூட விதி அவதானித்துக் கொண்டேயிருக்கும். இதனைக் கருத்தில் வைத்து திருவள்ளுவரும்

"அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குக வாங்கே செயல்" என்றும் உயிர்கூட ஏதோவோர் தகையில் வாளால் தினமும் அறுபடுகிறதென்பதை

"நாளென வொன்று போற்காட்டி யுயிரீரும்
வாளாதுணர்வார்ப் பெறின்" என அறியத்தந்துள்ளார். நடப்பது நடந்தேயாகும்-எவ்வாறு எது நடைபெறவேண்டுமோ அவற்றைக் கூட விதி பின்னின்று செயற்படுத்துகின்றது.

செல்வேந்திராவின் தவப்புதல்வன் பிரதீப்குமார் அருமையானதோர் தார்மீக குடும்பத்துப் பொக்கிஷமாகப் பிறந்து வளர்ந்து, நடமாடி, தனது இன்னுயிரை இறைவன்பால் இணைத்துக் கொண்டார். இதுவும் விதிவழியே செயற்பட்டுள்ளது. கவலைதான் இருப்பினும் அன்னாரது ஆத்மா சாந்திக்காக யாமனைவரும் இறைவனிடம் பிரார்த்திப்போமாக. அன்னாரை நினைந்து ஓர் நிழல் தரும் விருச்ஷத்தை ஆலயவளாகச் சூழலில் நட்டு வளர்த்துவிடுவதால் ஆத்மசாந்திக்கு அது துணைதரும்.

**மகாராஸஸ்றீ சு.து.சண்முகநாதக் குருக்கள்**
**மாவையாதீனகர்த்தா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதீப் நாம் மறக்கமுடியாத பண்பாளன் - பணியாளன்

உயர்ந்தநெடிய தோற்றம், புன்னகை நிறைந்த முகம், அன்பாகப் பண்பாகப் பழகும் குணம், அர்ப்பணம் நிறைந்த ஒரு நற்பணியாளன் பிரதீப் குமாரை நாம் இழந்துவிட்டோமே என்று நாம் எண்ணும்போது நம் நெஞ்சு கனக்கிறது. எம் நிறுவனத்தின் முப்பத்திநான்கு வருட பணிவாழ்வில் எமக்கு ஏற்பட்ட ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

எப்போ எங்கு கண்டாலும் சிரித்துக்கொண்டே எப்படிப் பாதர் என்று கேட்கும் அந்த இனிமையான குரல் என் மனதில் என்றும் பசுமையானவை. மறக்கமுடியவில்லையே - மனம் மீண்டும் கனக்கிறது.

பணிவாழ்வில் அர்ப்பணமும், கடமையுணர்வும் கொண்டு அளப்பரிய சேவை வெய்தவர். எமது நிறுவனத்தில் அவரின் பணி சமூக இசைவாக்கம் - எனவே சமூகத்திலுள்ள எல்லாமட்டங் களிலும் எந்தப் பாகுபாடுமின்றி, வித்தியாசம் எதுவும் பாராது ஓடி ஓடி உழைத்தவர். சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நேரம் பாராது, மக்களின் வசதிக்கேற்ப சென்று பணிசெய்தவர். அர்ப்பணம் மட்டுமல்ல திறமையும் நிறைந்தவர் கூட.

பணிவாழ்வில் நேர்மையைக் கடைப்பிடித்தவர். அவர்பற்றி எந்த சக பணியாளரும் என்னிடம் குறையோ அல்லது முறை யிட்டதோ கிடையாது.

பிரதீப்பின் சாவுச் செய்தி கேட்டு எமது சக நிறுவனத்தின் சக பணியாளர்களின் வேதனை துயர் என்பவற்றை வார்த்தைகளினால் கூறிவிடமுடியாது. சகபணியாளர்களின் துயர் எமக்கு ஒரு செய்தியைத் தந்தது:- பிரதீப் நீர் எம் குடும்பத்தில் ஒருவன், குடும்பத்தில் ஒருவரை இழந்தோம் என்ற உணர்வில் எல்லோரும் ஏங்கித் தவித்து நின்றார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொருவரின் விம்மல், கண்ணீர் நிரம்பிய விழிகள் விபரிக்க முடியாத காயங்களின் சோகக்கதை. பழகிய காலம் சொற்பம் எனினும் நினைவுகள் கோடி. நாமே இப்பிரிவின் சோகத்தினால் உள்ளத்தில் தாங்கமுடியாத சுமையோடு தவிக்கின்றோம் என்றால் இவரின் தந்தை சகோதரர் உறவுகள் படும் துயர் சொற்களினால் கூறிவிட முடியாது.

இப்படியான ஒரு உத்தம இளைஞனை எம் நிறுவனத்தின் பணியாளனாக தந்த உங்களுக்கு என் தலைசாய்த்து நன்றிகள் கூறுவதுடன், உங்கள் துயரில் நாமும் இரண்டறக் கலந்து இவரின் ஆத்மா சாந்திக்காக பரம்பொருளை வேண்டி நிற்கின்றோம்.

இவரின் ஆன்மா இறைவனில்அமைதி அடைவதாக.

**ஜெயக்குமார்**
[பாதர்]





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கந்தரோதையாக் கல்லூரி முதல்வர் திரு.க.சிவாஜி அவர்கள் வழங்கிய அஞ்சலி உரை

சுன்னாகத்தில் கல்விப் பாரம்பரியமும், சைவப்பாரம்பரியமும் மிக்க குடும்பத்தில் தோன்றிஜயவர் அமரர் செல்வேந்திரா பிரதீப்குமார் அவர்கள். அமரரின் தந்தையார் திரு செல்வேந்திரா J.P அவர்கள் ஸ்கந்தாவின் மிகுந்த அபிமானத்துக்குரிய பழைய மாணவர். எல்லோரையும் மதிக்கின்ற பண்பாளர் தன் இனிய மனையாளை இழந்த நிலையிலும் இரு புதல்வர்களையும் ஆளாக்க வேண்டும் எனக் கருதி அல்லும் பகலும் உழைத்தார். அவரது முயற்சிகளால் பிள்ளைகள் இருவரும் கல்வியில் வல்லவர்களாகி உயர்நிலை அடையும் வேளை காலன் தலைமகன் பிரதீப்குமாரை கவர்ந்துவிட்டான். அவரர் பிரதீப்குமார் எமது கல்லூரியில் சிலவருடகாலம் கணணி ஆசிரியராகப் பணி செய்தவர். மிகுந்த பணிவோடு தன் கடமையைச்சீராகத் செய்தவர். அவரது திருமணப் பதிவு வைபவத்தில் எமது கல்லூரிச் சமூகம் கலந்து கொண்டு சிறப்பித்தது. தினமும் அமரரின் தந்தையார் கல்லூரி வாசலால் செல்லும்போது கல்லூரிக்கு வருகை தந்து உரையாடி மகிழ்வார். தன் பிள்ளைகளின் சிறப்பைக் கூறி மகிழ்வார், நம்பமுடியவில்லை இவ்வளவு விரைவில் பிரதீப்பின் வாழ்வு முடியும் என்று. என்னசெய்வோம் பழகிய எம்மால் மறக்கமுடியவில்லை என்றால் பாசமாக வளர்த்த தந்தையால் இனிய மனைவியால், உடன்பிறப்பால் எப்படித்தாங்கமுடியும். அன்னாரது ஆத்மா சாந்திபெற ஸ்கந்தா சமூகத்தின் சார்பில் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆறுதலைக் கூறி அமர்கிறேன்.

**க.சிவாஜி**
**அதிபர் ஸ்கந்தரோதையாக் கல்லூரி**
**சுன்னாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தரோதையாக் கல்லூரி உப அதிபர்

செஞ்சொற்செல்வர் **ஆறு. திருமுருகன்** அவர்கள்

# வழங்கிய பிரார்த்தனையுரை

சிரித்த்முகம், நெடியதோற்றம், இனியபேச்சு, கருணையுள்ளம், இத்தனையும் நிறைந்த திரு. பிரதீப்குமார் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு திடுக்குற்றேன். சிறுவயதுப்பிள்ளைகளாக உலாவிய காலம் முதல் அவரை நன்கு அறிவேன். இறப்பதற்கு முதல்நாளும் என்னைக் கண்டதும் தன் தொப்பியைக் கழட்டி மரியாதை செய்து சேர் என்று கனிவுடன் அழைத்த காட்சி அகத்தில் நிறைந்து நிற்கின்றது. நம்பமுடியவில்லை திரு. செல்வேந்திரா அவர்கள் தாயை இழந்த தனவார்களை கண்கலங்காமல் காத்தவர். மாமிமார் தம்முகவிராக நேசித்தவர்கள். பிரதீப்குமாரும் தம்பியாரும் இராம இலக்குமணன் போல் இணைபிரியாது இன்பத்திலுத் துன்பத்திலும் இருவரும் ஒருவராகவாழ்ந்ததை நான் நன்கு அறிவேன். கனடாவில் இருந்து திருமணப் பதிவுக்காக பெண் வந்தவேளை அமலர் பிரதீப் ஸ்கந்தாவில் ஆசிரியராக பணிபுரிந்தார். தனது நிட்சயதார்த்தம் குறித்து எடுத்துரைத்தார். நீங்கள் எதிர்காலத்தில் கனடா வரும்போது உங்களைச் சந்திப்பேன் என ஆவலாகக் றினார். எல்லாமே எதிர்பாராத விதமாக எதிர்மாறாக முடிந்துவிட்டது. இறப்பின் பின்பும் மும்மடங்காக நெடியதோள் வீரன் வீழ்ந்து கிடப்பதுபோல் கிடந்த காட்சி உள்ளத்தை உறுத்தியது. என் சொல்லோம் நல்ல ஆத்மாவை நாம் அனைவரும் இழந்து விட்டோம். பிரதீப்குமார் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்ல வார்த்தையில்லை. எல்லாம் வல்ல துர்க்கையம்பான் பிரதீப்குமாரை அரவணைத்து ஆறுதல் வழங்கவேண்டுவதோடு அன்னாரது குடும்பத்துக்கு மனத்தை யிரத்தைக் கொடுக்குமாறு பிரார்த்தித்து அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I am missing you Dear...

I never knew I could miss you so much. You were so kind and patient. You loved me immensely; no word can describe your passion on me. You were my ultimate joy.

Yesterday is just a memory
Our laughter was sunny and bright
Then clouds started to gather
For you were no where in sight.

You were my first real love
And this I will never forget
How you left without a warning
No good-byes, my only regret.

No matter what my wrongs
You offered only love
Until the day you left me
For your new home up above.

I know you still are with me
Your love is within my heart
Though life is no longer present
Our souls will never part.

This is given to you in honor
Of all that we did share
I just wanted you to know, dear,
How much I really did care.

The way you lived will always be an inspiration for me because you are always accepting, happy and grateful for family, considerate and gentle with others. You tempered me, gave



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

me grace and a serenity I never had. I will miss you forever. I am a different person for having been so fortunate to be married to such a wonderful human being but God played on us. Thank you Predip for your life, for leading me all the time and for the wonderful experiences we had together. They can never be duplicated.

God's great plans change our past to memories and our future to so call "dream." Where do I go now? What do I do?

You left me all alone;
You left me sad and scared.
You left me in our life for the dark and the unknown.
There was so much more with me that you could've shared;
You'll never understand how important it is to me

I miss your smile!
I miss your control!
I miss your sweet voice and talks!
I miss your emails, SMS and phone calls!
I miss you so much da!
I WISH YOU COULD COME BACK TO ME!!!

'To meet, to know, to love and then to part is the sad tale of many a human heart'.

**Yours' Beloved,**
**Niththy (Cinnan).**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடிப்பிரிந்த உறவு

இளமைக்கே உரித்தான துடிதுடிப்பு, திடகாத்திரம், விடாமுயற்சி, அர்ப்பணிப்பு, இலட்சியப் பற்று மிக்க ஒரு உறவு தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் அறிமுகமாகிய அந்தக் காலகட்டத்தை ஒரு கணம் நினைவுபடுத்திக் கொள்கின்றோம். வலிவடக்குப் பிரதேசத்தில் இயங்கும் இளைஞர் கழகங்களில் மல்லாகம் வடக்கு இளைஞர் கழக உறுப்பினராக எம்முடன் இணைந்து கொண்ட செல்வேந்திரா பிரதீப்குமார் ஒரு குறுகியகாலப் பகுதிக்குள்ளே இளைஞர் சேவை மன்றத்தின் கீழ் இளைஞர் புனர்வாழ்வு உத்தியோகத்தராக நியமனம் பெற்று எம்முடன் மிக நெருக்கமாக உறவைப்பேணிக்கொண்டவர்.

இளைஞர் சேவை நடவடிக்கைகளில் பெற்றுக் கொண்ட அனுபவங்களும் உணர்வுகளும் பொதுச்சேவையின்பால் அவருக்கு ஒரு ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் ஊட்டிவிட் டிருந்தன. அவர் தனது சேவையில் போருட் நிறுவனத்திலும் அதனைத் தொடர்ந்து கரிதாஸ் கியுடெக் நிறுவனத்திலும் தொடர்ந்த காலப்பகுதிகளில் கூடதிட்டங்களினூடே தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் தொடர்பினைப் பேணி வந்தார்.

மனித நேய அமைப்புக்களுடன் இணைந்து பலருக்கும் வாழ்வாதாரமாக பணிபுரிந்த அந்த உறவை வாழ்வா? தாரமா? என்ற கேள்விக்குறியாக்கி எம்மிடம் இருந்து பிரித்துவிட்ட காலனின் கொடுமையை நினைக்கையில் எம் நெஞ்சம் கனலாகி நிற்கிறது.

இழப்புக்களே வரலாறாகிக் கொண்டிருக்கும் எம் இனத்தின் நிலமைக்குள் எவ்வளவுதான் நாம் எம்மைத் தேற்ற முயற்சித்தாலும் - இத்தகைய ஒரு தொண்டனின், செயல்வீர னின், தன் இறுதிநேரம் வரை சேவையுடன் கலந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவின் தியாகத்துக்கு நாம் தலைவணங்குகிறோம்.

அன்னாரின் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரது ஆத்மாசாந்திக்காகவும் இவ்வேளையில் பிரார்த்திக்கிறோம்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற
யாழ்மாவட்ட அலுவலகம்
யாழ்மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம்
வலிவடக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம்
வலிவடக்கு பிரதேச இளைஞர் கழகங்கள்

"தனக்கு கிடைக்கின்ற ஊதியத்தின் மதிப்பைக் காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமூகத்தில் உயரமுடியும்"

**- ஆபிரகாம் இலிங்கன்-**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பிற்கு இலக்கணம் பிரதீப்

என் இனிய நண்பன், சகோதரன் பிரதீப்குமாரின் அகால மரணச் செய்தி கேட்டு ஏங்கிப்போன ஊரவர்களில் யானும் ஒருவன். வீரபத்திரர் கோவிலடி வெறுமையாகிவிட்டது. துடுப்பாட்டத் தடிகள் ஓய்ந்து போய் வெறுத்துப் பார்க்கிறது. வயது வேறுபாட்டிற்கு அப்பாற்பட்ட அன்புத் தோழமை அவனுக்கும் எனக்குமுள்ள தொடர்பு. எங்கள் ஊர் வைபவங்களை தங்கள் வீட்டு நிகழ்வாகக் கருதுபவன். என்னிடம் வர்த்தக பாடம் படித்த மாணவன். ஆதலால் அவனிடம் மாணவ உணர்வுடன் கூடிய பக்தியையும் யான் அறிவேன். வீரபத்திரர் ஆலய தொண்டர் சபையிலும் சேர்ந்து ஆலய வளர்ச்சிக்கு தன்னை அறப்பணித்தவன். எங்கள் விளையாட்டுக் கழகத்தில் சிறந்த சுழல்பந்து வீச்சாளராகவும், நிதானித்தாடும் துடுப்பாட்ட வீரனாகவும், அணி அங்கத்தவர்களிடையே ஒற்றுமையும், தன்னம்பிக்கையையும் வளர்த்து வெற்றிகள் பல ஈட்ட காரணமாக இருந்தவன். ஐயனார் கோயில் அடியார்களுக்கு தாக சாந்தி செய்ய ஆவலாய் நின்ற உன்னை காலன் அவசரமாய் அழைத்துவிட்டான் போலும். தென்மராட்சியில் நீ வீழ்ந்து போன செய்தி எங்களை நிலை குலையைச் செய்தது. யார்தான் பிரதீப் உன் மரணத்தை ஏற்பார்? வாழத்தலைப்பட்டு வாசல் திறந்த வேளை வாடி வீழ்ந்தாயே. காலனவனுக்கு இரக்கமில்லை. விதியென்று விம்மி வெம்புவதைவிட வேறு எமக்கு என்னதான் செய்யமுடியும். நண்பா நீ நல்லவன், வல்லவன், பண்பாளன், எவ்வுலகிலும் எவரையும் கவரவல்லவன். ஆதலால் இறையுலகில் இறைவனையும் கவர்வாய் சென்றுவா? உனது ஆத்மா சாந்தியடைய வீரபத்திரர் விளையாட்டுக் கழகம் சார்பாக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வீரபத்திரர் விளையாட்டுக் கழகம் சார்பாக**
**வ.நந்தீஸ்வரன்**
**ஆசிரியர் யா/ஸ்கந்தவரோதையாக்**
**கல்லூரி சுன்னாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சகலா நினைவில் எங்கள் பிரதீப்......??

யாழ்பாபணக்குடாவின் வலிகாமம் வடக்குப் பகுதியின், அறிவுச் செல்வத்திற்கும் சமூகப்பண்பாட்டிற்கும், சமய வாழ்வுக்கும் பெயர்பெற்ற மல்லாகத்தில் எங்கள் அன்புக்கும் பெருமைக்கும் உரியவர்தான் காலஞ்சென்ற பிரதீப்குமார். திரு திருமதி செல்வேந்தி ராவின் சிரேஸ்ட புத்திரனாவார். கடந்தகாலத்தில் நடந்த உள்நாட்டுப் போரில் தனது தாயாரை இழந்தார். தகப்பனாரினதும், தனது மாமி மார்களினதும் அரவணைப்பில் தனது கல்வியைத் தொடர்ந்து சிறப் புப் பட்டம் பெற்றார். கம்பியூட்டரில் தான் இவரது சிறப்புப் பெறுபேறு கள் பெற்று சிறிது காலம் கம்பியூட்டர் விரிவுரையாளராகவும் பின் கரிதாஸ் கியூடெக் என்னும் நிறுவனத்தில் சமூக இசைவாக்கக் குழுத் தலைவராகவும் பணிபுரிந்தார்.

எங்கள் கிராமத்தில் இருக்கும் வீரபத்திரர் ஆலயத்தின் தொண்டனாக ஆலயத்தில் நடைபெறும் திருவிழாக்கள், மற்றும் விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மற்றைய தொண்டர்களுக்கு நல்வழிகாட்டியாகவும் விளங்கினார்.

எனது வைத்திய சேவை காலத்தில் என்னிடம் வந்து ஆலோசனைகளைப் பெற்று தனது நோய்களைத் தீர்த்துக் கொண்டார். மற்றவர்களுக்கு உதவிசெய்யும் மனப்பான்மையும், மற்றவர்களுடன் மரியதையாகவும், பண்பாகவும், பழகும் சுபாவம் கொண்டவர். கோவில்களுக்கு தொண்டு செய்வதில் மிகவும் ஆர்வம் உடையவர். கடைசியாக எங்கள் வீரபத்திரர் ஆலயத்தின் அலங்காரப் பூசை நடைபெற்றபோதும், சங்காபிஷேகம் நடை பெற்ற போதும் தனது தெண்டை சிறப்பாகச் செய்து முடித்துவிட்டு மறுநாளே தனது அலுவலாக நிறுவனத்திற்கு செல்வதாக என்னிடம் கூறிச் சென்றார் சென்று இரண்டு நாட்களின் பின் அவரது அகால மரணச் செய்தி கேட்டு தாங்கொணாத் துயரம் அடைந்தேன். படைத்தவன் அடியில் படைப்புக்கள் சங்கமமாவது நியதி. அவர் தன் அருமைத் தம்பியையும், அன்புத் தந்தைதயையும், நிச்சயமாக்கப்பட்ட தன் அருமைத் துணைவியையும், சக ஆலயத் தொண்டர்களையும், நண்பர்களையும் ஏங்கித்தவிக்க விட்டு இவ்வுலக வாழ்வை விட்டுச் சென்றுவிட்டார். அவரின் ஆத்மா சாந்தியுடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி — வைத்தியகலாநிதி ஆ.சிவபாதம் மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவின் ஒரு கண்ணீர்

என்னருமைத் தம்பியேஉன்னை எப்படி மறப்பேன்
சின்ன வயதில் துள்ளி நடந்து விளையாடும்போதும்
பின் கல்வி என்னும் அருந்தேனை சுவைத்திட்ட காலங்களிலும்
உனது ஒவ்வொரு அசைவினையும் கண்டு மகிழ்ந்த
கோலம் கண்ணில் தெரியும் போதெல்லாம் உன்நினைவே
என்முன் விரியுதடா.
இன்று கல்வியால் உயர்ந்து தொழில்நலம் கண்டு சிரிக்கும்
வேளையில் இவ்விதி வந்ததோ? என்செய்வேன் உன்னாத்மா
சாந்திவேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சு.பு'பாலசிங்கம்**
**கிராம உத்தியோகத்தர்**

---

சூரியனுக்கு எனது வணக்கம். பிறப்பு இறப்பு மனிதனாகப் பிறந்தவனுக்கு உண்டு. இது முடிந்த செயல் என்று யோகர் சுவாமி கூறினார். எனது மனதில் தோன்றியதைக் கூறுகிறேன். காலஞ்சென்ற செல்வேந்திரா சுசிலாதேவி எனது அயலவர். எனக்கு வலது கையாக இருந்து எனக்கு வழிகாட்டினார். காலம்சென்ற பிரதீப் எனது மகன் வாகீசனின் நண்பன். அவர்கள் இருவரும் எனது இரு கண்கள். கண்களில் ஒன்றை இழந்து துடிக்கின்றேன். அவரது சினேகிதம் என் மகனுக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்தது. தந்தை வழிகுடும்பத்திற்கும், தாய்வழிகுடும்பத்திற்கும் எனது துயரை பகிர்ந்து கொள்கிறேன். இவரது இழப்பு குடும்பத்துக்கு மட்டுமல்லாது வங்களா ஒழுங்கை வாழ் மக்களுக்கும் பெரும் இழப்பு. இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வணங்குகிறேன்.

**சிவராயா சகுந்தலாதேவி**
**வங்களா ஒழுங்கை**
**மல்லாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I worked with Predip for seven months within the psycho-social team of Caritas-Hudec. He was the team leader of the animators working with the communities
affected by tsunami, especially in Mullaitivu area. Predip was a very valuable colleague and a very nice person. I admired him for his constructive way to deal witl1problems. He had a positive influence on all his colleagues and he was naturally gifted to bring harmony and c.onsensus in the group.
He was humble, always very interested to learn and improve. But he was also very ambitious. He wanted to contribute with an excellent work to the well-being of the
people.
Our team is full of positive energy and good talents. All our efforts are focused to give the best in the work we are doing for and with the people. Predip was a main
part of this. *We* miss him a lot and it is difficult to accept his lost.
We will always remember him and never forget the nice time we shared together.

**Giovanna Federici, Caritas Italiana Psycho-Social Advisor, Caritas-Hudec Jaffna**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Predip was not simply answering « yes », but always « of course », inclining slightly his head on one side. This natural demonstration of spontaneous goodwill and huge kindness is one of the main qualities I keep in mind from him.

He had lots of talent ; constantly adapting himself to each new situation. Not frightened by new challenges, he had gradually worked for Caritas Hudec in different departments; "Livelihoods", "Monitoring Pool", "Community Participation"... Others would have been lost with such a succession of changes but Predip seemed happy to tackle new responsibilities as he was always showing enthusiasm, curiosity and motivation.

He had integrated very quickly in the organisation and developed a good network with the people and communities he worked with. He was a very charismatic person: good knowledge of his work, great understanding of the people, loud voice, big smile, excellent eye-contact and a sturdy constitution!

He was dedicated to his work for the tsunami and war victims, in Sri Lanka at first but had other plans in the near future elsewhere.

He had told me about his projects. Personal, first. His "nearly wife" in Canada, Nithy. The ring he was wearing holding Nithy's name was famous and we used to play jokes about it because it was as well the name of the Program Manager.

And professional. The ambition to do a Masters in Canada in Information Systems and/or International Studies, the competitive entry examination for a position with the Government of Sri Lanka

Before I left Sri Lanka, we had both agreed that we would sent each other emails illustrated with pictures for each event of life « whether good or bad ». The only one I had time to receive 10 days after my departure were the terrible news of the 10th of April.

Predip was not only a colleague but really a friend. He will remain so and I will miss him.

**Marie-Caroline Willaume**
**(ex – Caritas-Hudec)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் குலவிளக்கே பிரதீப்

பாசமிகு மகனே...............
தாங்கமுடியவில்லை உன் இழப்பை
மறக்கமுடியவில்லை உன் நினைவுகளை
தொட்டிலில் இருந்தது தொடக்கம் இறுதிவரை
உன் அசைவுகளை ரசித்தவன் நான் அல்லவா

உன்மங்கலக் கோலம் கண்டு மகிழ்ந்திருந்தேன்
மொட்டவிழ்ந்த மலராய் நின்ற நீ
கட்டவிழ்ந்து மணம் பரப்பும் முன்
காலனிடம் பறிபோனாயோ?

கிளைபரப்பி விருட்சம் போல் வளர்வாய் என நினைத்தேன்
புயல்காற்றில் சாய்வாய் என நான் நினைக்கிவில்லை
கனவு என நினைத்து மறக்க முயல்கிறேன்
ஆனால் முடியவில்லையே என்ன செய்வேன்?

நீங்கா நினைவுகளுடன் உன் ஆத்மா சாந்திக்குபிரார்த்திக்கும்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**பிள்ளைஅன்ரி, சித்தப்பா, பெரியன்ரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதீப் என்று நல்லோன் மறைந்தான்

நேற்று வாழ்ந்தவர் இன்றோ இல்லை
என்பது உலகின் நியதி என்பர்
எங்கள் அன்புப் பிரதீப் உனக்கும்
எங்களைப் பிரிய விதிவந் ததுவோ?
சிரித்த முகமும் அன்புப் பேச்சும்
எவரையும் உறவாய் அணைக்கும் பண்பும்
எங்கே போனது? எங்கே போனது?
என்னால் நம்ப முடியவே இல்லை
எம் கல்லூரிக் கணனிப் பிரிவின்
ஆரம்ப கால ஆசிரியன் நீ
கணனி அறியா மாணவர் தமக்குக்
கல்வி ஊட்டி நல்வழி காட்டினை
இன்றோ பிரிந்தாய் எங்கோ மறைந்தாய்
உந்தன் ஆத்மா சாந்தியடைக

**ம.பா.மகாலிங்கசிவம்**
ஆசிரியர்
யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிகள் சுமந்த ஈரத்துடன் கண்ணீர்க் காவியம்............

## அன்புத் தம்பியின் உள்ளத்திலிருந்து..........

அன்பிற்கோர் அண்ணனாய்:
ஆசைக்கோர் தம்பியாய்:
பாசம் என்ற நந்தவனத்திலே
இணைந்திருந்த இரு மலர்கள் நாம்
பிறப்பு முதலாய் உன்னோடு
இன்பத்திலும் துன்பத்திலும் இணையாகி
ஈருடலும் ஓருயிருமாய் நண்பன்போல் என்னுடன் எப்போதும்
அருகிலிருந்து அளவளாவி ஒன்றாய் உண்டு
ஒன்றாய்ப் படுத்துறங்க ஓங்கி வளர்ந்த எம்
அன்புப் பெரு விருட்சம் ஒடிந்து போனதோ?
ஓயாது என் மனத் துயரம்
மாறுமோ மாறாது என் அண்ணா
திடீரென வந்த உன்செய்தி என்னைக் கதறி அழவைத்தது
ஓடோடிவந்து பார்க்கையிலே கண்திறந்து பார்க்கவில்லையே
தேடிவந்த என்னை பிரசன்னா டேய் என்று அழைக்கவில்லையே
உதிரக் கடலின் நடுவில் உன்னைக் காண
என்ன பாவம் செய்தேன் அண்ணா
எனக்கொன்று நடந்தால் துடிக்கும் – உன் இதயம்
உறங்கிப் போனது ஏனோ? என்
உயிரே துடிக்குது அண்ணா
அண்ணா... அண்ணா... என்று கத்தினேன்
கேட்கவில்லையா? உன் காதிற்கு
இடையில் உன் விருட்சம் அறுந்து போனது என்று
நினைக்கும் போது..............................
விழியோரம் நனைந்ததடா அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி வந்து சதி செய்ததடா.
பொதுச்சேவையே தொழிலாகக் கொண்டு
போக்கும் வரத்தும் பாதுகாப்பாக இருந்தும்
போனதேனோ உந்தன் உயிர்
ஏங்குதடா எந்தன் உள்ளம்
குண்டுகள் துளைக்காத குணம் மிகுந்த
உந்தன் சேவைக்கு மத்தியில்
இருண்டு போனதோ வானம்?
இடிவந்து சூழ்ந்தது ஏனோ?
மாதங்கள் இரண்டு சென்றாலும்
இது காலமெல்லாம் கண்ணீர் விட்டாலும்
மாறுமோ என்துயரம் ?
இனிக் காண்பேனோ ? உன் திருமுகம்
என் உடலில் உயிருள்ளவரை
என்னோடு கலந்த உன் உதிரம்
என்றும் கதை பேசுமடா...............
அன்புக்கோர் அண்ணனாய்
பண்புக்கோர் தோழனாய்
பாசம் பொழிந்த உனை
இனி எங்கு காண்பேன்
என் இதயத்தில் உன் நினைவுகள்
ஈரமாய் நிலைத்திருக்க.........................
என் கண்ணீரே காணிக்கை.

**அன்புள்ள தம்பி**
**பிரசன்னா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையின் கண்ணீர்

அன்பு மகனாக அருகிருந்த செல்வனே
ஆறுதல் மொழி கூறி யாரை இனி அழைப்பனோ
இன்முகம் கண்டு இனியவனேகூறும்
இனியவனே உனையிழந்தே தவிக்கிறேன் ஐயா.

## சித்தப்பா பெரியப்பாமார் துயரம்

எங்கள் செல்வன் நீயென நாளும்
ஏந்தி மகிழ்ந்த கோலமும் மாறுமோ
பொங்கும் கண்ணீர்த் துளிகளைச் சிந்தியே
துயரினை மறந்திட முடியுமோ அறியோம்

## மாமன் மாமியார் துயரம்

மருமகன் என்று மகிழ்வுடன் அழைத்து
மகிழ்ந்திட நின்ற திருவுடையோனே
வருமுயர் வாழ்வுதனையிழந்தின்று
வானகம் சென்றதும் ஏனோ சொல்வாய்?

## மனைவியின் கண்ணீர்

அன்புக்குரியவரே அன்பான என்னவரே
அன்பு குழைந்ததுவோ? அன்புமலர் அறுந்ததுவோ?
இன்பமணவாழ்வு இனிக்குமெனவே நினைந்து
இணையவழிகாட்டும் கையெழுத்திட்டபின்னும்
பொன்னான மங்கல நாண் புனையாது போனதென்ன
போகும் வழி நெடுமியே என்றறிந்து தானோ நீர்
இன்றும் மறைந்தீரோ? இடைநடுவிற் பறந்தீரோ?
இனியும் எந்தன் நிலை என்னாமோ ஆண்டவனே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத் தம்பியின் கண்ணீர்

அன்புக்கோர் துணையாய் ஆதரவு தந்து நின்ற
அண்ணாநீ எங்குற்றாய்? எங்குற்றீர் யாரறிவார்
இன்பப் பெருவிளக்காய் இனிக்கும் இருமலராய்
சிரித்து நின்ற எனை விட்டு ஏன்மறைந்தீர் அண்ணாவே
உன்னில் நானெனவும் என்னில் நீயெனவும்
சிரித்துநின்ற கோலங்கள் தான் மறைந்து போனதுவோ?
என்னில் தான் கலந்த என்னண்ணா ஏன்மறைந்தீர்?
எப்படித்தான் உனை மறந்து வாழ்வேனென் அண்ணாவே.

## நண்பர் துயரம்

பழகிட இனிய பண்புடையோனே
பழமென இனிக்கும் திருவுடையோனே
வழங்கிடும் உந்தன் வண்ணமாம் சொல்லின்
வனப்பினை இனியாம் காண்பதும் எங்கோ?.

## அயலவர் கண்ணீர்

உதவுதற் கினிய உள்ளம்
உரைத்திடும் இனிய வார்த்தை
இதமுறப் பொழியும் உந்தன்
இன்னகை தன்னை நாமும்
கண்டுளம் மகிழ்ந்த காட்சி
கனவென ஆன தின்றோ?
கண்களுக் கெட்டாத் தேசம்
காணவோ விரைந்து சென்றாய்?

## தேற்றம்

சோகமே வாழ்வு என்னும்
தொடர்கதை கண்டு பின்னும்
ஏகமாய் நின்று நாமும்
ஏங்குதல் ஏனோ சொல்வீர்?
வேகமாய் வந்த கண்ணி
வேதனை செய்த கோலம்
ஏகநாயகனின் அடியில்
எம்மையும் சேர்க்கும் அன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்தல்

எமது அன்புச் செல்வம்
பிரதீப்குமார் அவர்களின் மறைவுச்
செய்திகேட்டு உடன் வந்து
உதவிப் பின்னும் அஞ்சலிப்
பிரசுரங்கள் வெளியிட்டும் பல
வழிகளிலும் நின்று
உதவியோர்க்கும் இன்று இந்த
நிகழ்வில் பங்கு கொண்டு பல
வழிகளிலும் உதவிய நல்
உள்ளங்களுக்கும் இம்மலரை
மணம்பெற வைத்த
அச்சகத்தாருக்கும் எமது
மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்
கொள்கின்றோம்.

08.06.2006 குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org